**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி – 02 - 2022**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி – 02 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கொழும்பு மாநாகர சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030 ஆம் இலக்க செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவை முகாமைத்துவத்தை முன்னேற்றுதல் மற்றும் கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1,230.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.44 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 1,042.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.00 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 187.72 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 1.44 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2022 ஒக்தோபர் 24 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 இன் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது நான்கு வழிநடாத்தல் குழுக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி மற்றும் தொடர்ந்து மாறிவரும் அமைச்சின் நோக்கெல்லை காரணமாக கூட்டங்களை நடாத்துதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 12 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டம் ஆண்டின் போது நான்கு நடாத்தப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| வடிவமைப்பு மேற்பார்வை நிறுவக அபிவிருத்தி | 100 | 65 | I. நிகழ்ச்சித்திட்டம் 2014 யூன் 3 இல் தொடங்கப்பட்டு 2019 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு | ஒப்பந்த முகாமைத்துவம், செயற்திட்ட ஒதுக்கீடு, சாத்தியவள ஆய்வு, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆலோசகர்கள் | | | பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் இறுதித் திகதி 2022 ஒக்தோபர் 24 வரை இரண்டு முறை நீடிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்தோபர் 24 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த செயற்திட்ட முன்னேற்றம் 57.27 சதவீதமாக உள்ளது. ஒரு பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்ட வெளியீடுகளுடன் நிகழ்ச்சித்திட்டம் மூடப்பட்டது. | சுற்றாடல் மதிப்பீடு, காணி சுவீகரிப்பு, மீள்குடியேற்ற செயன்முறை போன்றவற்றின் குறைபாடுகள் காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் மெதுவாக நகரும் நிகழ்ச்சித்திட்டமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| | | | | II. மொத்த செயற்திட்ட காலப்பகுதியில் 33 சதவீதம் ஆலோசனை நிறுவனத்தை தெரிவுசெய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும், இணங்கப்பட்ட காலப்பகுதியின் பிரகாரம் ஆலோசனை நிறுவனத்தால் பணியை பூர்த்தி செய்ய முடியவில்லை. பின்னர் ஒப்பந்தம் இரண்டு முறை 2 1/2 ஆண்டுகளிற்கு நீடிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த முகாமைத்துவம், செயற்திட்ட ஒதுக்கீடு, சாத்தியவள ஆய்வு, சுற்றாடல் மதிப்பீடு, காணி சுவீகரிப்பு, மீள்குடியேற்ற செயன்முறை போன்றவற்றின் குறைபாடுகள் காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் மெதுவாக நகரும் நிகழ்ச்சித்திட்டமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. |
| (அ) | மாதம்பிட்டியவில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை | 100 | 97 | மாதம்பிட்டிய கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையின் நிர்மாணம் தாமதமடைந்து வருவதால் நாளாந்தம் பம்பி நிலையத்திற்கு பெறப்படும் சுமார் 95,000 கனமீற்றர் கழிவுநீர் எவ்வித சுத்திகரிப்பும் இன்றி கடலிற்கு விடப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிப்பதற்கான காணி 2022 திசெம்பர் 31 வரை நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்டிருக்காதது டன் நிதிப் பற்றாக்குறையால் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. |
| (ஆ) | வடக்கின் நீர்ப்பிடிப்பு பகுதியில் சேமிக்கப்படாத 7 பகுதிகளுக்கு கழிவுநீர் வசதிகளை வழங்குதல். | 100 | 91 | பம்பி நிலைய தளங்கள் மற்றும் வீதி வலையமைப்பின் நிலப்பரப்பு அளவைக்கான ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் புவி தொழில்நுட்பவியல் விசாரணைக்கான ஒப்பந்தத்திற்கான கேள்வி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | மேலதிக கடன் நிதிகள் கிடைக்காததால் இந்த நடவடிக்கையின் பெறுகை செயன்முறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஏற்பட்ட ஆலோசனை ஒப்பந்தக் கிரயங்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலதாமதம் ஏறத்தாழ 39 மாதங்களாக இருந்தது. | |
| (இ) | வடக்கு நீர்ப்பிடிப்பு பகுதியில் தற்போதுள்ள 5 சிறிய பம்பி இல்லங்களை புனரமைத்து மேம்படுத்துதல். | 100 | 69 | கொழும்பு மாநகர சபை தமது சொந்த நிதியினால் நிலைமை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலைமை மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி நடவடிக்கைக்கான நிதிகள் கிடைக்கவில்லை. |
| (ஈ) | மாளிகாவத்தையில் இருந்து மாதம்பிட்டிய பம்பி நிலையம் வரையிலான அடிநிலை குழாய் கழிவுநீர். | 100 | 91 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாமத காலப்பகுதி ஏறத்தாழ 39 மாதங்களாகும். | நிதி வரையறை காரணமாக ஆகும். |
| (உ) | வடக்கு நீர்ப்பிடிப்பு பகுதியில் சாக்கடைகளை மேம்படுத்துதல், புனரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல். | 100 | 82 | வரைவு கேள்விகள் 2019 செப்தெம்பர் 28 இல் மதிப்பாய்வுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டன, ஆனால் அவை அங்கீகரிக்கப்படாததுடன் நிலப்பரப்பு அளவையை வழங்குவது தாமதமாகியது. | நிதி வரையறை காரணமாக ஆகும். |
| (ஊ) | உயிர் திட முகாமைத்துவம் | 100 | 82 | உயிர் திட முகாமைத்துவ வழிகாட்டல்களை தயாரிப்பது தொடர்பான இறுதி செயலமர்வு 2017 நவம்பர் 13 இல் நடாத்தப்பட்ட போதிலும் வர்த்தமானி அறிவித்தலுக்கான இறுதி வழிகாட்டல்கள் 2022 திசெம்பர் 31 வரை சிங்களம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | சுற்றாடல் அதிகாரசபையால் சிங்களம் மற்றும் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டியுள்ளது. |

**முகாமைத்துவத்தின் பதில்**

கழிவுநீர் முறைமை அபிவிருத்தி தொடர்பான அறிவுள்ள ஆலோசகர்களைத் தெரிவுசெய்தல் கடினமான பணியாகும், நிதிகள் கிடைக்காதமை மற்றும் ஒப்பந்தத்தின் மோசமான முன்னேற்றம் என்பன தாமதத்திற்கு காரணமாகின்றன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

ஒதுக்கீடு செய்து நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தம் நீடிக்கப்பட்டதன் காரணமாக மொத்த ஆலோசனைச் செலவினம் 5.29 மில்லியன் டொலர்களாக 61 சதவீதம் அதிகரித்திருந்த போதிலும் எதிர்பார்த்த இலக்கு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலநீடிப்பு காரணமாக ஆலோசனை கிரயம் அதிகரித்துள்ளது உண்மைதான். ஆனால் ஒப்பந்தத்தில் உள்ள மொத்த ஆலோசகர்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்ச ஆலோசகர்கள் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும், அவர்களின் ஒப்பந்தத்தின் ஆரம்ப நோக்கெல்லை அல்லாத துறைமுக நகர அபிவிருத்தியின் கழிவுநீர் இணைப்புக்கான வடிவமைப்புப் பணிகளுக்காக அவர்கள் ஒதுக்கப்பட்டனர், ஒப்பந்த ஏற்பாட்டின் பிரகாரம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கு (CCPI) இணங்க வருடாந்த விகித அதிகரிப்பு காரணமாக ஆலோசகர்களின் கிரயமும் அதிகரித்தது. | மிகுதிப் பணிகளை CMC பதவியணியினர் மேற்பார்வை செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | எந்தவொரு நிதியளித்தல் ஏற்பாடும் இல்லாமல் செயற்திட்ட இறுதித் திகதியிலிருந்து 8 மாதங்களுக்கு அப்பால் மூடப்பட்ட-சுற்றுவட்ட (Closed-Circuit) தொலைக்காட்சி ஒப்பந்தத்திற்காக நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. செயற்திட்டம் மூடப்பட்டதால் CCTV ஒப்பந்தம் 2022 ஒக்தோபர் 24 இல் ரூபா 3.12 மில்லியன் மேலதிக கொடுப்பனவுடன் நிறுத்தப்பட்டது. எனினும், 89 கிலோமீற்றர்கள் கொண்ட புவியீர்ப்பு சாக்கடைகளில் 58 கிலோமீற்றர்களும் 1974 ஆள்துளைகளில் (manhole)) 1242 ஆள்துளைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்கப்படும் நேரத்தில் ஒப்பந்த காலம் கடன் இறுதி திகதிக்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தெரிந்த உண்மையாகும். ஆனால் ஒப்பந்தத்தின் மிகுதி காலப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்திடம் இருந்து மேலதிக நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. மேலும், கடனை மூடுவதற்கு முன்னர் ஒப்பந்தத்தின் நோக்கெல்லையை அதிகரிப்பதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்கு பரஸ்பர உடன்படிக்கை இருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தத்தின் மிகவும் கடினமான மற்றும் முக்கியமான பகுதியாக இருந்த விசேட சாதனங்களைப் பயன்படுத்தி, ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தை, அதாவது, 8.3 கிமீ போர்ஸ் மெயின்களின் (Force Mains) நிலைமை மதிப்பீடு மற்றும் அவசர பழுதுபார்ப்புக்களை முழுமையாக பூர்த்திசெய்ய முடிந்தது. ஒப்பந்தத்தின் 2வது பகுதியானது CCTV மூலம் புவியீர்ப்பு சாக்கடையின் நிலைமை மதிப்பீடு காணப்பட்டதுடன் எரிபொருள் மற்றும் மின்சாரம் கிடைக்காத காரணத்தால் பணிகள் மூன்று மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வேலையின் ஒரு பகுதியை பூர்த்திசெய்ய முடியும். | CMC மூலம் மதிப்பீட்டு அறிக்கையைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆலோசனை நிறுவனத்துடன் அமைச்சின் செயலாளரால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் விரிவான திட்டமிடல், நிர்மாணத்தை அழகுபடுத்துதல் மற்றும் செயற்திட்ட | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிறைவேற்று முகவராண்மை மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவம் ஆகியவற்றை ஆலோசனை நிறுவனம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் 2017 மே 04 இல் M/S லார்சன் அன்ட் ரோப்ரோவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாவது பிரிவிற்கான பம்பி நிலையங்கள், புதுப்பித்தல், உயர் அழுத்த குழாய்கள் மற்றும் ஈர்ப்பு குழாய்களை அமைப்பதற்கான திட்டங்களைத் தயாரித்தல் ஒப்பந்ததாரரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக ஆலோசனை நிறுவனத்திற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அந்த பணிக்காக ஒப்பந்த கம்பனிக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதால் அதே நோக்கத்திற்காக இரண்டு மடங்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | ஆலோசனை நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நேர அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகிறது. தாமதம் மற்றும் நிர்மாண ஒப்பந்ததாரர்களை தெரிவுசெய்தல் மற்றும் காணிகளை விடுவித்தல் என்பவற்றில் தாமதம் போன்ற காரணங்களால் ஒப்பந்தங்களை அமுல்ப்படுத்தாமை காரணமாக ஒப்பந்த மேற்பார்வைக்காக ஆலோசனை நிறுவனத்திற்கு பயனற்ற கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>i. தற்போதுள்ள கழிவுநீர் முறைமையின் 59 கிலோமீற்றர் தர பரிசோதனை தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.<br>ii. 22 கிலோமீற்றர் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளம், இன்னும் 7 கிலோமீற்றர் முழுமையாக குழாய்கள் பதிக்கப்படாததுமான பாதாள மற்றும் அழுத்த கழிவுநீர் வலையமைப்பு முறைமை உட்பட தலகொடுவ மற்றும் | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிறைவேற்றல் முகவராண்மை மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். |

கலிங்க மாவத்தை பம்பி நிலையங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஒப்பந்தத்தின் மேற்பார்வை

iii. வெள்ளவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையின் நிர்மாண ஒப்பந்தத்தின் மேற்பார்வை.

iv. 12.4 கிலோமீற்றர் கிருல - நாரஹேன்பிட்டி கழிவுநீர் வலையமைப்பு முறைமை மற்றும் இரண்டு பம்பி நிலையங்களை அமைப்பது தொடர்பான நிர்மாண ஒப்பந்தத்தின் மேற்பார்வை.

v. தெற்கு நீர்பிடிப்பு பகுதியில் தற்போதுள்ள கழிவுநீர் சாக்கடை வலையமைப்பு முறைமையை புதுப்பித்தலின் மேற்பார்வை.